# பத்திரிக்கை செய்தி

## மணல் குவாரியில் மணல் எடுக்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய தலைமையிடத்து துணை வட்டாச்சியர், திருநெல்வேலி அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் அபராதம் ரூ.10,000/- விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.ரவி, திரிபுரசுந்திரி அபார்ட்மெண்ட், பெருமாள்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் சீவவலப்பேரி கிராமத்தில் குவாரி லைசென்ஸ் பெற்று அரசு அனுமதியுடன் மண் எடுத்து விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார். இவர் 08.03.2019ம் தேதி பாளையங்கோட்டை தாலுகா அலுவலகத்தில் புதிதாக பொறுப்பேற்ற வட்டாட்சியர் திரு.கனகராஜ், ஆவர்களை நேரில் சந்தித்தபோது மேற்படி திரு.கனகராஜ் அப்போதைய தலைமையிடத்து துணை வட்டாச்சியராக பணிபுரிந்த திருமதி.விஜி என்பவரை பார்க்க சொன்னதாகவும், அதன்படி புகார்தாரர் மேற்படி திருமதி.விஜியை சந்தித்தபோது, திருமதி.விஜி அவர்கள் புகார்தாரரிடம் நீங்கள் தொடாந்து குவாரியில் மண் அள்ள வேண்டுமென்றால் ஒவ்வொரு மாதமும் ரூ.5,000/- கொடுங்கள் என்றும், அப்போது தான் அவரது அதிகார எல்கைக்குள் மண் அள்ளவிடுவேன் என்றும், இல்லையென்றால் ஏதாவது ஒரு காரணம் சொல்லி கேஸ் போடுவேன் என்று கூறி லஞ்சம் கேட்டுள்ளார். அதன் பேரில் 12.03.2019ம் தேதி புகார்தாரர் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 12.03.2019ம் தேதி திருமதி.விஜி, துணை வட்டாச்சியர் லஞ்சப்பணம் ரூ.5,000/- புகார்தாரரிடமிருந்து பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், திருநெல்வேலி நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 26.11.2025 திருமதி.விஜி, துணை வட்டாச்சியர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி திருமதி.விஜிக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு-7ன்படி மூன்று ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.10,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.